இனிமையான குழந்தைகளே! பாபா பிந்து சொரூபமாக இருக்கின்றார். அவரை சரியாகப் புரிந்துக் கொண்டு நினைவு செய்வதே, புத்திசாலித்தனமாகும்

கேள்வி: எல்லையற்ற கண்ணோட்டத்தில் சொப்பனத்தின் அர்த்தம் என்ன? இவ்வுலகம் கனவு உலகம் என்று ஏன் சொல்லப்படுகிறது?

பதில்: கடந்து முடிந்தவைகளை கனவு என்று சொல்லப்படுகின்றது. நீங்கள் அறிந்து கொண்டீர் கள் இவ்வுலகமே கனவு மயம் என்று. அதாவது சத்திய யுகம் ஆரம்பம் முதல் கலியுகத்தின் இறுதி வரை அனைத்துமே கடந்து முடிந்து விட்டது. இப்போது உங்களுக்கு வினாடியில் கனவு உலகின் நினைவு வந்து விட்டது. நீங்கள் உலகத்தின் ஆரம்பம், இடை, இறுதி மூலவதனம், சூட்சும வதனம், ஸ்தூல உலகத்தினை அறிந்துள்ள மாஸ்டர் பகவானாக ஆகிவிட்டீர்கள்.

பாடல்: எனது இதய வாசலில் யார் வந்தார்.......

ஓம்சாந்தி! தனது இனிமையிலும் இனிமையான குழந்தைகளுக்கு, செல்லமான சாலிகிராம் குழந்தைகளுக்கு சிவபாபா வந்து புரிய வைக்கின்றார். சாலிகிராம் சிவபாபாவின் குழந்தைகள். அவர் நமக்கு பாடம் கற்றுத் தருகின்றார் என்று குழந்தைகள் அறிந்து கொண்டீர்கள். அவரைப் பற்றி சிறிது கூட யாருக்குமே தெரியாது. சிவனுடைய கோவிலுக் கும் செல்கின்றார்கள். அங்கு மிகப்பெரிய லிங்கத்தினை வைத்துள்ளார்கள். அது கூட தவறானது. நான் பிந்துவாக உள்ளேன் என்பதனை பாபா புரிய வைக்கின்றார். பிந்துவை யார் புரிந்து கொள்ள முடியும்? அவரை சிலர் அகண்ட ஜோதி சொரூபம் எனக் கூறியுள்ளார் கள். அவர் பிந்துவாக உள்ளார். அவரை நினைவு செய்வது மிகவும் கடினம். அடிக்கடி மறந்து விடுகின்றார்கள். சிவலிங்கத்தின் மீது மலர்களைத் தூவி பூஜை செய்யும் பழக்கம் உள்ளதால், அது நினைவில் வருகின்றது. நம்முடைய தந்தை பிந்து சொரூபமாக உள்ளார் என்பதை அடிக்கடி மறந்து விடுகின்றோம். முழு நாடகத்தில் அவருடைய பாகத்தினை அவர் நடிக்கின்றார். சுகக்கடல், சாந்தி கடல் என்று பிந்துவை மகிமை செய்ய முடியுமா? எவ்வளவு சிறிய புள்ளியாக இருக்கின்றார்?

யாரை நினைவு செய்வது என குழந்தைகள் கேட்கின்றார்கள். இந்த விஷயங்களை புத்திசாலி குழந்தைகள் தான் புரிந்து கொள்வார்கள், இல்லையெனில் சிவலிங்கத்தினை நினைவு செய்துக் கொண்டேயிருப்பார்கள். கிருஷ்ணரை புத்தியால் நன்றாக நினைவு செய்ய முடியும். பாடும் பொழுது கூறுகிறார்கள்: நினைவு செய்தாலும் நினைவில் இருத்த முடிவதில்லை, அவரது முகம் எப்படி இருக்கும்? இவர் (சிவபாபா) புள்ளியாக உள்ளார், அதிசயமாக உள்ளது. ஞானத்தின் நடனம் செய்கின்றார்கள். இதனை கனவு உலகம் என்று சொல்லப்படுகின்றது. கடந்து போன விஷயங்களை கனவு என்று சொல்லப்படுகின்றது. உலகமே கனவு என்று கூறப்படுகின்றது. எது கடந்து முடிந்து விட்டதோ, அது உங்களுடைய புத்தியில் வருகின்றது. முழு பிரம்மாண்டம் மூலவதனம், சூட்சுமவதனம், சத்திய யுகம், திரேதாயுகம், துவாபர்யுகம் அனைத்தும் கனவாக ஆகிவிட்டது. எது கடந்து முடிந்து விட்டதோ அவை அனைத்துமே கனவு தான். இப்போது கலியுகத்தின் முடிவு. இந்த

உலகமே கனவு அல்லவா? எல்லைக்குட்பட்ட கனவுகள் வருகின்றது. உங்களுடைய புத்தியில் எல்லைக்கு அப்பாற்பட்டது நினைவில் வருகின்றது. சூரிய வம்சம், சந்திர வம்சம் கனவாக ஆகிவிட்டது. அதனால் தான் இதனை கனவு உலகம் என்று சொல்லப்படுகின்றது. இத்தனை ரகசியங்கள் குழந்தைகளைத் தவிர வேறு யாருக்குமே தெரியாது. சத்திய யுகத்தில் அளவற்ற சுகம் இருந்தது, அவை கடந்து முடிந்து விட்டது. இப்போது குழந்தைகளின் புத்தியில் ஆரம்பம், இடை, இறுதியைப் பற்றிய முழுமையான ஞானம் உள்ளது. ஓரு பாபாவை தான் நினைவு செய்ய வேண்டும். பாபா புரிய வைக்கின்றார், வேறு யாரும் கூற முடியாது. இந்த கனவு உலகத்தினைப் பற்றி புத்தியில் புரிந்து கொண்டீர் கள். இவைகள் கடந்து முடிந்து விட்டது என்று புத்தி அறிந்துக் கொண்டது. உங்களுக்கு புத்தியில் முழுமையான ஞானம் உள்ளது. ஆரம்பம் முதல் இறுதி வரை அறிந்து கொண்டீர்கள். இப்போது நீங்கள் திரிகாலதரிசி, திரிலோகநாத் ஆகிவிட்டீர்கள். நீங்கள் திரிலோகநாத் மூலம் பகவானை போல் ஆகிவிட்டீர்கள். உங்களுக்கு பகவான் வந்து பாடத்தினைக் கற்றுத் தருகின்றார். ஒரு வினாடியில் கனவு வருகின்றது அல்லவா? ஒரு வினாடியில் உங்களுக்கு முழுமையாக நினைவில் வரவேண்டும். விதை மற்றும் விருட்சம். பாபாவிடம் ஆரம்பம், இடை, இறுதியினைப் பற்றிய ஞானம் உள்ளது. ஆதலால் ஞானக்கடல், அனைத்தும் அறிந்தவர் என்று கூறப்படுகின்றது. ஒவ்வொருவர் நிலையும் இதைப் போல் தான் இருக்கக் கூடும். ஒவ்வொரு வரின் நிலையைப் பற்றி அறிவாரா என்ன? எந்த நிலை கல்பத்திற்கு முன்பு இருந்ததோ, அதே நிலையில் உள்ளார்கள். உங்களுக்குத் தான் தெரியும். முயற்சி செய்விப்பதற்காக கூறுகின்றார் - நன்கு முயற்சி செய்யுங்கள்.

இப்போது நீங்கள் சுயதர்சன சக்கரதாரியாக ஆக வேண்டும். இவை கடந்து முடிந்து விட்டது என்று அறிந்து கொண்டீர்கள்: இவ்வாறு தேவதைகள் இராஜ்யம் செய்து கொண்டு இருந்தார்கள். மறுபடிம் வந்து இராஜ்யம் செய்வார்கள். கடந்த காலம், நிகழ்காலம், எதிர் காலத்தினை நினைவு செய்ய வேண்டும். கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலத்தினை நினைவு செய்துக் கொண்டேயிருங்கள். அதனைத் தான் சுயதர்சன சக்கரம் என்று கூறப் படுகின்றது. சிவலிங்கத்தினை நினைவு செய்து பழகிவிட்டனர் அதனால் பாபா ஜோதிர்

லிங்கமாக உள்ளார் என்று என்று நினைக்கினற்னர். பிந்துவாக உள்ளார் என்று கூறினால் குழப்பம் அடைகின்றார்கள். அவர்கள் நினைக்கின்றார்கள் ஆத்மா சிறியது, பரமாத்மா பெரியதாக இருக்கின்றார். இச்சமயம் கலியுகத்தில் மிகவும் ஆடம்பரம் உள்ளது என்று குழந்தைகள் தெரிந்து கொண்டீர்கள். இதனை மாயையின் தோற்றம் என்று சொல்லப்படு கின்றது. மாயையின் பொலிவு, ஆடம்பரம். இப்போது உலகம் மிகவும் நன்றாக ஆகி விட்டது என்று கூறுகின்றார்கள், மிகவும் பெரிய பெரிய மாளிகைகள் கட்டியுள்ளார்கள். அமெரிக்கா எவ்வளவு ஆடம்பரமாக உள்ளது. எவ்வளவு நவீனமான பொருட்கள், அனைத்தும் நன்கு பூசப்பட்டு பளபளப்பாக உள்ளது. இப்போது அனைத்துமே அழிந்து போய்விடும்.

புதிய உலகத்தினை போன்று நாளுக்கு நாள் பெரிய, பெரிய கட்டிடங்களும்,

அணைக் கட்டுகளும் கட்டுகின்றார்கள். மாயாவி மனிதர்கள், அசுர மனிதர்களின் ஆடம்பரம். இவை கள் அனைத்துமே மந்திரவித்தைப் போன்றது. அறிவியல் கர்வம் அனைத்தும் அழிந்து விடும் என்பது அவர்கள் புத்தியில் உள்ளது, ஒருவர் மற்றவருக்கு கூறுகின்றார்கள், இதில் தலையிடாதீர்கள், இல்லை யென்றால் அழித்துவிடுவோம் என்று. அமெரிக்கா தன்னைத் தானே பலசாலி என்று நினைக்கிறது. அவசியம் இரண்டாவதாக யாராவது இருப்பார்கள். சண்டையிடுவார்கள். இரண்டு பூனை சண்டையிட்டது என்று பாடியுள்ளார்கள்.... யாதவர்கள் தனது குலத்தினை அழிக்கின்றார் கள். அவர்கள் இரண்டு பூனைபோல உள்ளார்கள், இதுவே தான் நடைமுறையில் நடைபெற்று கொண்டிருக்கிறது.

குழந்தைகள் தெரிந்து கொண்டீர்கள் முன்னால் கூட இதே சமயம் ஞானத்தினைப் பெற்றீர்கள். இப்போது பெற்றுக் கொண்டு இருக்கின்றீர்கள். பாபா வந்து முழுமையான ஞானத்தினைப் புரிய வைக்கின்றார். எவ்வாறு பாபா புத்தியில் உள்ளதோ, அதேபோல் குழந்தைகளின் புத்தியிலும் இருக்கின்றது. பிந்துவை தான் சிவன் என்று கூறப்படுகின்றது. ஆத்மாவில் முழுமையான பாகம் பதிவாகியுள்ளது. உங்களுக்குள்ளும் முழுமையாக பாகம் பதிவாகியுள்ளது. சத்தியுகத் தின் ஆரம்பம் முதல் கலியுகம் வரை. சத்தியுகம், திரேதாயுகத்தில் சுகத்தினை அனுபவம் செய்கின்றீர்கள். அச்சமயம் பாபாவிற்கு எந்த பாகமும் (பார்ட்) இல்லை. பாபா கூறுகின்றார், என்னை விட உங்களுடைய பாகம் அதிகமானது. நீங்கள் சுகத்தில் இருக்கும் போது, நான் நிர்வாண் தாமத்தில் (மூல வதனம்) இருப்பேன். எனக்கு பாகம் இல்லை. அனைத்து பாகத் தினையும் நீங்கள் தான் நடிக்கின்றீர்கள், களைத்து விட்டீர்கள். நீங்கள் பாதி கல்பமாக பக்தி செய்து, செய்து களைப்படைந்து விட்டீர்கள். பாபா வந்து பலனைத் தருகின்றார். பூஜாரியிலிருந்து, பூஜைக்குரியவராக ஆக்குகின்றார். நீங்கள் அறிந்து கொண்டீர்கள் நாம் பூஜைக்குரியவராக இருந்தோம் பிறகு பூஜாரி ஆகி விட்டோம். பரமாத்மா அவரே பூஜைக்குரிய வர், அவரே பூஜாரி என்பது கிடையாது. நாம் தான் அவ்வாறு ஆகின்றோம்.

பாரதம் அழியாத கண்டம் என்று மகிமைப்பாடுகின்றார்கள். பாரதம் தான் சிவபாபாவின் ஜென்மபூமி. ஜென்ம பூமியில் தான் மனிதர்கள் பலியாகின்றார்கள். நமது தேசம் என்பதற் காக காங்கிரஸ் கட்சியினர் கூட எவ்வளவு தலையை உடைத்துக் கொண்டார்கள். அயல் நாட்டினரை வெளியேற்றி விட்டார்கள். இந்த ஜென்ம பூமி சொர்க்கமாக இருந்தது. பின்னர் ஐந்து விகாரம் என்ற மாயை விழுங்கிவிட்டது. நாம் இராவணனை மிகவும் பெரிய எதிரி என்று புரிந்துள்ளோம். மாயை என்ற இராவணன் தான் மிகவும் பெரிய எதிரி என்று யாருமே புரிந்து கொள்ளவில்லை. நமது இராஜ்யத்தினை விழுங்கிட்டது. இது ரகசியமாக எலி மாதிரி ஊதி, ஊதிக் கடிக்கின்றது, எலி கடிப்பது யாருக்குமே தெரியாது. மாயை என்ற எலி கடித்து, கடித்து மிகவும் நஷ்டத்தை ஏற்படுத்திவிட்டது. நம்முடைய இராஜ்யத்தை அபகரித்து விட்டது என்று யாருக்குமே தெரியாது. நம்முடைய எதிரி யார்? என்று யாருக்குமே தெரியாது. நாம் எவ்வாறு ஏழையாக ஆகிவிட்டோம்? மாயை என்பது மிகப் பெரிய எலி. பாதி கல்பமாக சாப்பிட்டு, சாப்பிட்டு (ஆட் கொண்டு) பாரதத்தை சோளியாக ஆக்கி விட்டது. மிகவும் பெரிய பலசாலியாக உள்ளது. இப்போது நீங்கள் அமைதியாக அமர்ந்து மாயையின்மீது வெற்றி அடைகின்றீர்கள். நாம்

எவ்வாறு குப்தமாக (ரகசியமாக) இராஜ்யத்தினை அடைகின்றோ6ம். எவ்வாறு ரகசியமாக இழந்தோம், மீண்டும் ரகசியமாக அடைகின்றோம். இதன் மீது வெற்றி பெற வேண்டும் என்று யாருக்குமே தெரியாது. இவைகள் மிகவும் ஆழமான விஷயங்கள். பாபாவின் உதவியின் மூலம் மீண்டும் இராஜ்ய பாக்கியத்தினை அடைகின்றோம். யாரும் கைகள், கால்களைப் பயன்படுத்த தேவை யில்லை. தனது எல்லையற்ற தந்தையிடமிருந்து குப்தமாக இராஜ்யத்தை அடைகின்றோம். மீண்டும் பாதி கல்பம் வரை இருக்கும். அந்த மாயை என்ற எலி சிறிது, சிறிதாக சாப்பிட்டு விட்டது, இப்போது நீங்கள் மீண்டும் ஒரு முறை இராஜ்யத்தினை அடை கின்றீர்கள், 21 பிறவிக்காக. 84 பிறவிகளின் ரகசியத்தினைப் புரிய வைக்கின்றார். இத்தனை, இத்தனைப் பிறவிகள் எடுத்தீர்கள் என்று உங்களுக்குத் தெரியும் சத்திய யுகத்தில் நீண்ட ஆயுள் இருக்கும். பின்னர் தூய்மையற்ற போகிகளாக ஆகிவிடுகின்றோம். துவாபுர கலியுகத்தில் 63 பிறவிகள் எடுக்கின்றோம். இதனை பாபா புரிய வைக்கின்றார். ஒவ்வொரு கல்பத்திலும் மாயை இராஜ்யத்தினை எடுத்துக் கொள்கின்றது. அதனிடமிருந்து மீண்டும் அடைகின்றோம். யார் எந்த தேசத்தில் வந்தார், எந்த தேசத்திற்கு செல்ல வேண்டும் என்ற பாடல் உள்ளது... ஆனால் புரியாமல் உள்ளார்கள். ஆத்மா எந்த தேசத்திலிருந்து வந்தது என்று உங்களுக்குத் தெரியும். ஏன் வந்தது? முழு சக்கரம் புத்தியில் உள்ளது. முழு நாடகத்தில் ஹீரோ, ஹீரோயின் பாகம் சிவபாபாவினுடையது. சிபாபாவுடன் யார், யார் பாகம் நடிக்கின்றார்கள். பிரம்மா, விஷ்ணு, சங்கருக்கு முதன் முதல் பிறவிக் கொடுக்கின்றார். பின்னர் குழந்தைகளுக்கு. நீங்கள் பாபாவுடன் உதவியாளர்களாக இருக்கின்றீர்கள். பாபா தன்னுடைய பாகத்தை நடித்துவிட்டு, வீட்டிற்குத் திரும்பி போய்விடுகின்றார். நீங்கள் உதவி செய்கின்றீர்கள், உங்களையும் தன்னுடன் முக்தி தாமத்திற்கு அழைத்துச் செல்கின்றார். நீங்கள் முக்தி தாமம் சென்று விட்டு பின்னர் ஜீவன் முக்தியில் சென்றுவிடுவீர்கள். இவைகள் எவ்வளவு நன்றாக புத்தியில் புரிந்து கொள்ள வேண்டும். இவை கனவு உலகம், கடந்து போய்விட்டது.

உங்களுக்குத் தெரியும். சத்தியுகம், திரேதாயுகத்தில் தேவதைகள் வாழ்ந்தார்கள், தற்போது இல்லை. எவ்வாறு கனவு உலகத்தினை புத்தியில் வைத்துள்ளார்கள் என்ற பாடலில் எவ்வளவு ரகசியங்கள் உள்ளது. எவ்வாறு முழு சக்கரம் சுற்றுகின்றது. எந்த ஞானம் பாபாவிடம் உள்ளதோ அது நம்மிடமும் உள்ளது. எல்லையற்ற தந்தையிடம், முழுமையான எல்லையற்ற ஞானம் இருக்கின்றது. இது கூட கனவாக ஆகிவிடும் என்று குழந்தைகளுக்குத் தெரியும். இவைகள் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள். இவை சத்தியயுக, திரேதா யுகத்தில் யாருடைய புத்தியிலும் இருக்காது. ஆழமான விஷயங் களைக் கூறுகின்றார். முழு சக்கரம் புத்தியில் இருக்க வேண்டும். பக்தி மார்க்கம் என்றால் என்ன? எப்பொழுது ஆரம்ப மாகியது. அதன் மூலம் பலனேயில்லை. பக்தி செய்து, செய்து நஷ்டத்தில் வந்து விட்டோம். இப்போது மீண்டும் சோளியிலிருந்து வைரமாக ஆகின்றோம். மாயை சோளியைப் போல் ஆக்கிவிட்டது. பாபா ஞான நடனம் கற்றுத் தருகின்றார். அங்கு சென்று நடனம் ஆடுவீர்கள். இவைகள் அனைத்துமே அதிசயமான விஷயங்கள், புரிந்து கொள்ள வேண்டும். இங்குள்ள பழக்க வழக்கங்கள் எதுவுமே அங்கிருக்காது. அந்த உலகமே விகாரமற்ற உலகம். அங்கு மாயையின் பெயர் அடையாளமே இருக்காது. முதலில் நீங்கள் பாபாவை நினைவு செய்யுங்கள், ஆஸ்தியைப்

பெற்றுக் கொள்ளுங்கள். அங்கு என்ன பழக்கமோ அதன்படி நடக்கும். அங்கு பழக் வழக்கங்கள் அனைத்தும் புதியதாக இருக்கும். அங்கு இம்மாதிரியான பண்டிகைகள் இருக்காது. இங்கு கவலை யிருப்பதால் உற்சாக மூட்டும் வகையில் பண்டிகை விழாக்களைக் கொண்டாடு கின்றார்கள். அங்கு தினமும் விழாவாக இருக்கும். அழுவதற்கான விஷயமே இருக்காது. பண்டிகை கொண்டாடும் பேச்சே இருக்காது. தினமும் சிறந்த நாளாக இருக்கும். அங்கு திருமணம் கூட மிகவும் சிறப்பாக செய்வார்கள். சீதனம் கொடுப்பார்கள். தாச, தாசிகள் (வேலைக் காரர்கள்) கிடைப்பர். மற்றபடி பண்டிகை விழாக்ககள் என்பதற்கு அவசியமே யில்லை. இவைகள் சங்கமயுகத்தின் விழாக்க்ள். பக்தி மார்க்கத்தில் கொண்டாடுகின்றார்கள். அங்கு சதா மகிழ்ச்சியாகவே இருப்பார்கள். நல்லது.

இனிமையிலும், இனிமையான காணாமல் போய்க் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு தாய், தந்தையான பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கங்கள். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணக்கான முக்கிய சாரம்:

(1) சுயதரிசன சக்கரத்தை சுற்றிக் கொண்டே மாயையின் மீது ரகசியமாக வெற்றி பெறவேண்டும். பாபாவிற்குச் சமமாக ஞானம் நிறைந்தவர்களாக ஆக இருக்க வேண்டும்.

(2) பாபா யார்? எப்படி இருக்கின்றார் அவரை சரியாக பிந்து ரூபத்தில் அறிந்து கொண்டு நினைவு செய்ய வேண்டும். பிந்துவாக ஆகி, பிந்து பாபாவை நினைவு செய்ய வேண்டும், வெகுளித்தனமாக இருக்கக் கூடாது.

வரதானம் : தந்தையின் (டைரக்^ன்) உத்தரவுபடி சேவை என்று புரிந்து ஒவ்வொரு செயலையும் செய்யக் கூடிய எப்பொழுதும் களைப்பற்றவர் மற்றும் பந்தனங்களிலிருந்து விடுபட்டவராக ஆவீர்களாக.

இல்லறத்தை சேவை என்று புரிந்து பராமரியுங்கள். பந்தனம் என்று நினைத்து அல்ல. யோகத்தின் மூலம் கணக்கு வழக்கை முடியுங்கள் என்று தந்தை உத்தரவு (டைரக்^ன்) கொடுத்துள்ளார். அது பந்தனம் என்பதோ தெரியும் தான். ஆனால் அடிக்கடி கூறுவதாலோ அல்லது யோசிப்பதாலோ இன்னுமே கடினமான பந்தனம் ஏற்பட்டு விடுகிறது. மேலும் கடைசி கணத்தில் ஒரு வேளை பந்தனமே நினைவிற்கு வந்து விட்டது என்றால் கர்ப்ப சிறைக்கு செல்ல வேண்டி இருக்கும். எனவே ஒரு பொழுதும் தன்னிடமே நொந்து கொள்ளாதீர்கள். சிக்கி கொள்ளாதீர்கள். மேலும் கட்டாயப்படுத்தப் பட்டவருமாகவும் ஆகாதீர்கள். விளையாட்டு விளையாட்டாக ஒவ்வொரு செயலையும் செய்து கொண்டே சென்றீர்கள் என்றால், களைப்பற்ற வராகவும் இருப்பீர்கள். மேலும் பந்தனத்திலிருந்து விடுபட்டவராகவும் ஆகிக் கொண்டே செல்வீர்கள்.

சுலோகன்: புருவ மத்தி என்ற குடிசையில் அமர்ந்து தவத்தின் மூர்த்தி ஆகி இருங்கள் - இதுவே அகநோக்கு தன்மை ஆகும்.